# யோசுவாவிற்கு தேவனின் அழைப்பு

1. *நிலத்தை கையகப்படுத்துவதற்கான அழைப்பு (1-4)*

*நீயும் இந்த ஜனங்கள் எல்லாரும் எழுந்து, இந்த யோர்தானைக் கடந்து, இஸ்ரவேல் புத்திரருக்கு நான் கொடுக்கும் தேசத்துக்குப் போங்கள் (வச.2)*

2. *தேவன் மீது நம்பிக்கை வைக்க அழைப்பு (5-6)*
   - *எதிரிக்கு எதிரான வெற்றியின் வாக்குறுதி (வச.5; 1 யோவான் 5:4)*
   - *தேவ பிரசன்னம் & வல்லமை பற்றிய வாக்குறுதி (எபி 13:5; மத் 28:18)*
   - *தேவனின் உண்மையுள்ள வாக்குறுதி (வச. 5,6; மத் 28:20)*
   - *முழுமையான வெற்றியின் வாக்குறுதி (வச. 6; வெளி 21:4,27)*
3. *பிரமாணத்தை நிறைவேற்ற அழைப்பு (7-8)*
   - *நியாயப்பிரமாணத்தின்படியெல்லாம் செய்யக் கவனமாயி...*
   - *அதை விட்டு வலது இடதுபுறம் விலகாதிருப்பாயாக.*
   - *இந்த நியாயப்பிரமாண புஸ்தகம் உன் வாயைவிட்டுப் பிரியாதிருப்பதாக.*
   - *இரவும் பகலும் அதைத் தியானித்துக்கொண்டிருப்பாயாக.*

## ஜனங்களின் பிரதியுத்ரம்

1. *நீர் எங்களுக்குக் கட்டளையிடுகிறதையெல்லாம் செய்வோம்*

   They Commit To A Life Of Surrender (v. 16)

2. *நாங்கள் மோசேக்குச் செவிகொடுத்ததுபோல உமக்கும் செவிகொடுப்போம்;*

   They Commit To A Life Of Submission (v. 17)

3. *உம்முடைய சொல்லைக்கேளாமல், உம்முடைய வாக்குக்கு முரட்டாட்டம்பண்ணுகிற எவனும் கொலைசெய்யப்படக்கடவன்;*

   They Commit To A Life Of Separation (v. 18)

மொத்தத்தில் மோசே என்கின்ற சிறந்த தலைவனை இஸ்ரவேல் ஜனங்கள் இழந்தபின்பு அவர்களுக்கு புதிதாக யோசுவாவை ஒரு தலைவனாக இருக்கும்படி அழைத்தார். யோசுவா தேவனால் அழைக்கப்பட்டு நியமிக்கப்பட்டு இருந்தாலும் அவன் மோசேயின் மூலமாக பயிற்றுவிக்கப்பட்டவனாக காணப்பட்டான். ஆக ஒரு சிறந்த தலைவன் ஆவதற்கு முன்பாக பயிற்சி அவசியம் மோசே இஸ்ரவேல் ஜனங்களுக்கு தலைவன் ஆவதற்கு முன்பாக கர்த்தர் நேரடியாக அவனுக்கு 40 வருடம் வனாந்தரத்திலே பயிற்சி கொடுத்தார். மோசே இஸ்ரவேல் ஜனங்களுக்கு தலைவன் ஆவதற்கு சில தகுதிகள் இருந்ததை எபிரேயர் 11ம் அதிகாரத்தில் விசுவாச வீரர்களின் பட்டியலில் நாம் காணமுடியும்.

அதேபோல யோசுவா ஒரு தலைவனாக நியமிக்கப்படுவதற்கு அவனிடத்தில் காணப்பட்ட சில நல்ல குணாதிசயங்களை குறித்து இந்த நாளிலே நாம் காண்போம். இது தலைவன் ஆவதற்கு மட்டுமல்ல ஒரு குடும்பத்தில் சபையில் சமுதாயத்தில் நாம் ஒரு சிறந்த மனிதனாகவும் காணப்படுவதற்கு இந்த குணாதிசயங்கள் மிகவும் அவசியம்.

## யோசுவாவிடம் காணப்பட்ட குணாதிசயங்கள்

### 1. யோசுவா ஆவியினால் நிரப்பப்பட்டவனாக காணப்பட்டான்.

**கர்த்தர்** மோசேயை நோக்கி: ஆவியைப் பெற்றிருக்கிற புருஷனாகிய யோசுவா என்னும் நூனின் குமாரனை நீ தெரிந்துகொண்டு **(எண் 27:18)** மோசே நூனின் குமாரனாகிய யோசுவாவின்மேல் தன் கைகளை வைத்தபடியினால் அவன் **ஞானத்தின் ஆவி**யினால் நிறையப்பட்டான் **(உபா 34:9)**

இதுவே முதல் குணாதிசயம். ஒரு மனிதன் இரட்சிக்கப்படாத பட்சத்தில் மேற்கொண்டு காணயிருக்கிற குணாதிசயங்கள் அவனிடத்தில் இருக்காது. ஆகவே முதலாவது ஒரு மனிதன் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படவேண்டும். அவன் கிறிஸ்துவை அதாவது பரிசுத்த ஆவியானவரை தன்னுடைய இருதயத்தில் ஏற்றுக்கொண்டவனாக காணப்படவேண்டும்.

இங்கே யோசுவா ஞானத்தின் ஆவியினால் நிரப்பப்பட்டான் என்று விசேஷமாக பார்க்கிறோம். ஒரு தலைவனுக்கு இது மிகவும் அவசியம்.

### 2. தேவ சமூகத்தை சந்தோஷத்தோடு அனுபவிகிறவனாக காணப்பட்டான்.

- நான் மோசேயோடே இருந்ததுபோல, உன்னோடும் இருப்பேன் **(யோசுவா 1:5)**
- இவ்விதமாய்க் கர்த்தர் யோசுவாவோடேகூட இருந்தார் **(6:27)**
- நூனின் குமாரனாகிய யோசுவா என்னும் அவனுடைய பணிவிடைக்காரனாகிய வாலிபன் ஆசரிப்புக் கூடாரத்தை விட்டுப் பிரியாதிருந்தான் **(யாத் 33:11)**
- அதிகாலமே யோசுவா எழுந்திருந்தபின்பு... **(3:1)**
- யோசுவா அதிகாலமே எழுந்திருந்தான் **(6:12)**

அதிகாலமே எழுந்து தேவனோடு நெருங்கி இருக்கக்கூடிய பழக்கத்தை யோசுவா கொண்டிருந்தான். யோசுவா மட்டுமல்ல அநேக தேவபிள்ளைகள் அதிகாலையில் எழுந்து தேவனோடு நேரத்தை செலவிட்டதை வேதாகமத்தை காணமுடியும்.

இரட்சிக்கப்பட்ட ஒரு தேவனுடைய பிள்ளை தேவசமூகத்தை வாஞ்சிக்கிறவனாக காணப்படுவான். தேவனோடு நேரத்தை செலவழித்து ஜெபித்து வேதத்தை வாசிக்கும் விருப்பம் உள்ளவனாக காணப்படுவான். **(1 பேதுரு 2:3** நீங்கள் வளரும்படி, புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள்).

### 3. கீழ்ப்படிதல் உள்ளவனாக இருந்தான்

உத்தமமாய் என்னைப் பின்பற்றின கேனேசியனான எப்புன்னேயின் குமாரன் காலேபும், நூனின் குமாரன் யோசுவாவும் தவிர, எகிப்திலிருந்து வந்தவர்களில்

இருபது வயதுமுதல் அதற்கு மேற்பட்டமனிதர்களில் ஒருவரும் என்னை உத்தமமாய்ப் பின்பற்றாதபடியால், அவர்கள் நான் ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் ஆணையிட்டுக்கொடுத்த தேசத்தைக் காண்பதில்லை என்று ஆணையிட்டிருக்கிறார் **(எண் 32:11,12).**

இதிலே இரண்டு காரியம் அடங்கியிருக்கிறது. பின்பற்றுவது என்பது சில சமயங்களில் எளிதாக காணப்படலாம் ஆனால் இங்கே ஆண்டவர் யோசுவாவை குறித்து உத்தமனாய் என்னைப் பின்பற்றின யோசுவா என்று சொல்லி குறிப்பிடுகிறார். உத்தமமாய் என்று சொல்லும்பொழுது உண்மை, நேர்மை, கீழ்ப்படிதல் இவைகளெல்லாம் அதிலே அடங்கியிருக்கிறது. ஆபிரகாமிடம் சொல்லும்பொழுது: நான் சர்வவல்லமையுள்ள தேவன்; நீ எனக்கு முன்பாக நடந்துகொண்டு உத்தமனாயிரு **(ஆதி 17:1).**

இரட்சிக்கப்பட்ட நாம், தேவ சமூகத்தை சந்தோஷமாய் அனுபவிக்கிறோமா, தேவனுக்கு முன்பாக கீழ்படிந்து உத்தமமாய் அவரை பின்பற்றுகிறோமா?

### 4. விசுவாசம் உள்ளவனாகவும் காணப்பட்டான்

மோசே கானான் தேசத்தை வேவுபார்க்கும்படி 12 பேரை அனுப்பும்போது அதிலே யோசுவாவும் இருந்தான். திரும்பிவந்து அவன் சொன்ன வார்த்தையில் விசுவாசம் காணப்பட்டது. நாங்கள் போய்ச் சுற்றிப்பார்த்து சோதித்த தேசம் மகா நல்லதேசம். **கர்த்தர்** நம்மேல் பிரியமாயிருந்தால், அந்தத் தேசத்திலே நம்மைக் கொண்டுபோய், பாலும் தேனும் ஓடுகிற அந்தத் தேசத்தை நமக்குக் கொடுப்பார் **(எண் 14:7,8)**

ஒரு தேவனுடைய பிள்ளையாய் இருக்கிற நமக்கு முன்பாக எப்படிப்பட்ட சூழ்நிலைகள் காணப்பட்டாலும் நாம் அதை ஜெயிக்க முடியும் என்கின்ற விசுவாசம் நமக்கு தேவை. நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம். விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம் **(எபி 11:6)**

### 5. ஜெபிக்கிறவனாக காணப்பட்டான்

கர்த்தர் எமோரியரை இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக ஒப்புக்கொடுக்கிற அந்நாளிலே, யோசுவா கர்த்தரை நோக்கிப் பேசி, பின்பு இஸ்ரவேலின் கண்களுக்கு முன்பாக: சூரியனே, நீ கிபியோன்மேலும், சந்திரனே, நீ ஆயலோன் பள்ளத்தாக்கிலும், தரித்துநில்லுங்கள் என்றான். அப்பொழுது ஜனங்கள் தங்கள் சத்துருக்களுக்கு நீதியைச் சரிக்கட்டுமட்டும் சூரியன் தரித்தது, சந்திரனும் நின்றது; இது யாசேரின் புஸ்தகத்தில் எழுதியிருக்கவில்லையா; அப்படியே சூரியன் அஸ்தமிக்கத் தீவிரிக்காமல், ஏறக்குறைய ஒருபகல்முழுதும் நடுவானத்தில் நின்றது. இப்படிக் கர்த்தர் ஒரு மனிதனுடைய சொல்கேட்ட அந்நாளையொத்தநாள் அதற்கு முன்னுமில்லை அதற்குப்பின்னுமில்லை; கர்த்தர் இஸ்ரவேலுக்காக யுத்தம்பண்ணினார் **(யோசுவா 10:12-14).**

இரட்சிக்கப்பட்ட நாம், தேவ சமூகத்தை சந்தோஷமாய் அனுபவிக்கிறோமா, தேவனுக்கு முன்பாக கீழ்படிந்து உத்தமமாய் அவரை பின்பற்றுகிறோமா? அதுமட்டுமல்ல தேவனோடு நம்முடைய விசுவாசம் எப்படிப்பட்டதாக இருக்கிறது? நம்முடைய ஜெபம் தேவனுடைய சமூகத்தில் எட்டக்கூடியதாக காணப்படுகிறதா?

அநேக சமயங்களில் தேவன் நம்முடைய ஜெபத்தை கேட்கிறதில்லை காரணம் நம்முடைய பாவம் அல்லது நம்முடைய அவிசுவாசம் அல்லது பிற சகோதரர்களோடுகூட இருக்கக்கூடிய ஐக்கிய குறைச்சல்.

### 6. குடும்பமாய் கர்த்தரை சேமிப்பதில் உறுதியாய் இருந்தான்

நானும் என் வீட்டாருமோவென்றால், **கர்த்தரையே** சேவிப்போம் என்றான் **(யோசுவா 24:15).** யோசுவா தன்னுடைய கடைசி நாட்களில் இஸ்ரவேல் ஜனங்களிடம் சொன்ன வார்த்தை இது.

யோசுவா தன்னுடைய வாலிபப்பருவம் முதல் வயதாகுமட்டும் கர்த்தருக்கு முன்பாக உண்மையாக உத்தமனாக காணப்பட்டு விசுவாசமுள்ளவனாயிருந்து இஸ்ரவேல் ஜனங்களுக்கு தேசத்தை பங்கிட்டுக்கொடுத்து ஒரு நல்ல தலைவனாக இருந்து மரித்தான்.

யோசுவா உயிரோடிருந்த சகல நாட்களிலும், கர்த்தர் இஸ்ரவேலுக்குச் செய்த அவருடைய கிரியைகள் யாவையும் அறிந்து யோசுவாவுக்குப்பின்பு வெகுநாள் உயிரோடிருந்த மூப்பருடைய சகல நாட்களிலும், இஸ்ரவேலர் கர்த்தரைச் சேவித்தார்கள் **(யோசுவா 24:31).**

நீங்களும் நானும் எப்படிப்பட்டவர்களாக காணப்படுகிறோம் ஆவியில் நிறைந்து இருக்கிறோமா? தேவ சமூகத்தை சந்தோஷமாய் அனுபவிக்கிறோமா? அவருக்கு கீழ்ப்படிந்து உத்தமமாய் நடக்கிறோமா? நம்முடைய விசுவாசம் எப்படிப்பட்டதாக இருக்கிறது? நம்முடைய ஜெபம் தேவசந்நிதியிலே எட்டக்கூடியதாக இருக்கிறதா? கடைசி வரைக்கும் நான் குடும்பமாய் தேவனை சேவிப்பதில் உறுதியாய் இருக்கிறேனா? சிந்திப்போம்! செயல்படுவோம்!! இதன்படி வாழ கர்த்தர் நமக்கு உதவி செய்யும்படியாக அவரிடத்தில் நம்மை ஒப்புக் கொடுப்போம்!!!